# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2383/32 - 2024 මැයි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.05.09

*2383/32 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம்***

***64 (5) ஆம் பிரிவின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்***

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினால் பெயர் குறித்து, அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட திருமதி டயனா கமகே அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 66(ஈ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 91(1) (ஈ) (xiii) உறுப்புரைப் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினராகுவதற்குத் தகைமையற்றவரெனவும், அதற்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதற்கான உரிமை இல்லையெனவும் S. C. Appeal No. 11/2024 ஆம் இலக்க விண்ணப்பம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளமையினால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியொன்று வெற்றிடமாகியுள்ளதாக, 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதனாலும்;

அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கென அந்த அரசியற் கட்சியின் செயலாளருக்கு மேலே குறிப்பிடப்பட்ட பிரிவின் கீழ் தகைமையுடைய அக்கட்சியின் அங்கத்தவரொருவரை பெயர்குறித்து நியமிக்கும்படி தேர்தல் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளமையினாலும்;

மேற்கூறப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. மொஹமட் முஜிபர் ரஹுமான் அவர்களை பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்;


1A - G 41905 — 364 (2024/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய *1981* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் *64(5)* ஆம் பிரிவுக்கமைய நடவடிக்கை மேற்கொண்டு, மேற்குறித்த திருமதி டயனா கமகே அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்து உயர் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமையின் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. மொஹமட் முஜிபர் ரஹுமான் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனத் தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது.

ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

எம். ஏ. பீ. சீ. பெரேரா,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

அமீர் பாயிஸ்,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
*2024*, மே *09*.

EOG *05-0077*